# 7 விடுதலைப்பயணம்

ஆபிரகாம்

↓

ஈராக்

↓

யாக்கோபு

↓

றூபன் லேவி யூதா
சிமியோன் யோசேப்பு
இசக்கார் செபுலோன் பென்ஜமின்
நப்தலி
தாண் காத் ஆசேர்

இறைவன் ஆபிரகாமை அழைத்த சந்தர்ப்பத்தில் ''உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய்'' (தொ.நூ. 12:2) என்று வாக்குப் பண்ணினார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, ஆபிரகாமின் குடும்பத்தை ஓர் பெரிய இனமாக வளரச் செய்தார். அவ்வாறு வளர்ச்சியடைந்த பெரிய இனம் எகிப்தில் குடியேறினார்கள்.

> யாக்கோபின் வழிவந்த இவர்கள் அனைவரும் மொத்தம் எழுபது பேர். யோசேப்பு ஏற்கனவே எகிப்தில் இருந்தார். பின்னர் யோசேப்பும் அவருடைய எல்லாச் சகோதரரும் அந்தத் தலைமுறையினர் அனைவருமே இறந்து போயினர்.
>
> (வி. ப 1:5-6)

இவ்வாறு ஆபிரகாமின் பரம்பரை எகிப்தில் எகிப்திய பார்வோன்களின் அனுமதியுடன் ரணையுடன் வளர்ச்சியடைந்தது. ஆயினும் பிற்காலத்தில் இவ்வாறு நடைபெற்றது.

> இவ்வாறிருக்க யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.
>
> (வி.ப. 1:8)

யோசேப்பைப் பற்றியும் அவரது மாபெரும் சேவையைப் பற்றியும் அறியாத புதிய அரசன் ஆட்சிக்கு வந்த போது இஸ்ரயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மூன்று படிமுறைகளை மேற்கொண்டான்.

1. எனவே கடும் வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் அவர்கள் மேல் நியமிக்கப்பட்டனர். பார்வோனுக்காக அவர்கள் பித்தோம், இராம்சேசு ஆகிய களஞ்சிய நகர்களைக் கட்டியெழுப்பினர்.
(வி.ப. 1:11)

2. பிறக்கும் போதே ஆண்குழந்தைகளைக் கொன்று விடுதல். (எபிரேய தாதியரான சிப்ரா, பூவா என்பவர்களுக்கு மன்னன் கூறியது) ''எபிரேயப் பெண்களின் ஆண்மகவு என்றால் அதைக் கொன்று விடுங்கள். பெண்மகவு என்றால் வாழட்டும்''
(வி.ப. 1:15,16)

3. ஆண் குழந்தைகளை நைல்நதியில் எறிந்துவிடக் கட்டளை. பின்னர் பார்வோன் தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆணை விடுவித்து ''பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்துவிடுங்கள்...... ''
(வி.ப. 1:22)

**இந்தப் பின்னணியில் தான் மோசே என்ற விடுதலை வீரன் பிறந்தார்.**

.......... அவள் கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள்; அழகாயிருந்தது என்று கண்டாள்; மூன்று மாதங்களாக அதனை அது மறைத்து வைத்திருந்தாள். இதற்கு மேல் அதனை மறைத்து வைக்க இயலாததால், அதனுக்காகக் கோரைப் புல்லால் பேழை ஒன்று செய்து அதன் மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள்; குழந்தையை அதனுள் வைத்து நைல் நதிக் கரையினுள்ள நாணல்களுக்கிடையில் விட்டு வைத்தாள். .......... அப்போது பார்வோனின் மகள் நாணலிடையே பேழையைக் கண்டு தன் தோழி ஒருத்தியை அனுப்பி அதை எடுத்தாள்; அதைத் திறந்த போது ஓர் ஆண் குழந்தையைக் கண்டாள்; ................ '' இது எபிரேயக் குழந்தைகளுள் ஒன்று'' என்றாள் அவள் ..........

(விப. 2:1 - 10)

இவ்வாறு அரச மாளிகைக்குள் செல்ல மோசேக்கு வழிவகுத்துக் கொடுத்த இறைவன், அரசிளங்குமரன் ஒருவன் பெறக்கூடிய எல்லா சலுகைகளையும் கொடுத்து, போர்க்கலைகளை கற்பதற்கும், தலைவனாக செயற்படத்தேவையான பயிற்சி களையும் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு அவரை ஆயத்தம் செய்த இறைவன் எரியும் முட்செடியின் நடுவே காட்சிகொடுத்து மோசேக்குத் தான் யாரென்பதை அறிமுகம் செய்து வைத்தார்.

மேலும் அவர், ‘‘உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே’’ என்றுரைத்தார். மோசே கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தம் முகத்தை மூடிக் கொண்டார்.

(வி.ப. 3:6)



7.2 படம் மோசேயின் அழைப்பு

இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு வழிநடத்திச் செல்வதே இறைவன் மோசேக்குக் கொடுத்த அழைப்பாகும்.

எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அதாவது கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர் இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு அவர்களை வழிநடத்திச் செல்லவும் இறங்கிவந்துள்ளேன்.


(வி.ப. 3:8)

பல்வேறு தடைகள், சவால்கள் மத்தியிலும் மோசே இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். பார்வோன் மன்னனிடம் சென்று மக்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். பார்வோன் இறை செய்தியை ஏற்றுக் கொள்ளாது இறைவனை

ஏமாற்றி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மறுப்புத் தெரிவித்தான். ஆயினும் இறைவன் மோசேயை அழைத்து அவரைத் தைரியப்படுத்தி, அவருக்குத் துணையாக ஆரோனையும் கொடுத்து உதவினார். இவ்வாறு தாம் கொடுத்த வாக்குறுதியை தாம் கூறியவாறே நிறைவு செய்தார்.


> ''நான் உன்னோடு இருப்பேன்...''
>
> (வி.ப. 3:12)

பார்வோன் இறைவனை ஏமாற்றி, இறைவல்லமையை ஏற்றுக் கொள்ளாமல் மனதைக் கடினப்படுத்திக் கொண்டு செயற்பட்டதன் விளைவாக அவனும் முழு எகிப்திய இனமும் 10 தண்டனைகளுக்கு/துன்பங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.




துன்பங்கள் படிப்படியாக வளர்ந்து தலைமகன் 'சாவு' நேரிடும்வரை பல துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டதை பின்வரும் விவிலியப் பகுதியிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

தலைமகன் சாவின் பின்னர் பார்வோன் மன்னன் இஸ்ரயேலரைப் போக அனுமதித்தான். ஆயினும் மீண்டும் தன் மனதைக் கடினப்படுத்திக் கொண்டு இஸ்ரயேல் மக்களைப் பின் தொடர்ந்து வந்ததால் இறைவனுடைய வல்லமை அளப்பரியது என்பதை இஸ்ரயேல் மக்களால் அனுபவ ரீதியாக அறிய முடிந்தது. அவர்கள் பெற்ற அனுபவத்தை இவ்வாறு எடுத்துக் காட்டலாம். இயற்கையின் அதிபதி இறைவனாவார். முழு உலகமும் அவருடைய படைப்பாகும். மனிதனுக்கு தனது அன்பையும் பாதுகாப்பையும் வெளிப்படுத்த இறைவன் இயற்கையை பயன்படுத்திக்கொள்கிறார்.




அன்று இறைமக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு கூட்டிச் செல்லும் பொறுப்பை மோசேயிடம் ஒப்படைத்த இறைவன் திருமுழுக்கின் வழியாக இறை பிள்ளைகளான எங்களையும் பலவித அடிமைத்தனங்களினின்று விடுவித்து இறையாட்சி என்னும் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை திருச்சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் கட்டுண்டிருக்கும் அடிமைத்தனங்களிலிருந்து விடுபடுவதோடு, நமது சகோதர, சகோதரிகளையும் அந்நிலையிலிருந்து விடுவித்து விண்ணகமாகிய வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு பயணிப்போம். இது இறைபிள்ளைகளாகிய எமது கடமையாகும்.

இஸ்ரயேல் மக்களைப் பாதுகாத்து வழிநடத்திய இறைவன், எமது வாழ்க்கைப் பயணத்திலும் எம்மைப் பாதுகாக்கிறார். எமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கிருக்க வேண்டும். அது ஓர் செயலூக்கமுள்ள நம்பிக்கையாக அமைய வேண்டும். செயலூக்கமற்ற நம்பிக்கை பற்றி தூய யாக்கோபு தமது திருமுகத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா?
'நம்பிக்கையும் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்.

(யாக்கோபு 2:14 , 17)

**செயற்பாடு**

1. இன்றைய சமுதாயத்தில் வாழும் இளவயதினருக்குள்ள அடிமைத்தனங்கள் ஐந்து எழுதி, அவற்றிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளையும் தருக.
2. மோசே பெற்ற அழைத்தலில் அவர் முகங்கொடுத்த சவால்கள் ஐந்து தருக.
3. உமது நம்பிக்கை செயலூக்கமுள்ள நம்பிக்கையாக அமைய நீர் வாழவேண்டிய முறையை, மூன்று உ தாரணங்களுடன் விளக்குக.

**வாழ்க்கைக்கு**

✝ விண்ணரசுக்கு செல்லும் பாதை ஒடுக்கமானது, கரடுமுரடானது, தடைகள் நிறைந்தது.

✝ வெற்றிபெற அப்பயணத்தில் உழைக்க வேண்டும். இறைவனுடன் ஒத்துழைத்தே

✝ வெற்றி நிச்சயம், நிச்சயமே.